**20 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 03.**

தேதி 20.11.2024

வழக்கு எண். – S.T.C. No.2637 /2023

வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு – பு.த.சா.1

பெயர் – சிவகொழுந்து

தந்தை பெயர் –

முகவரி –

வயது –

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 20.11.2024 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். எதிரி ஆஜர்.)

**நேரம்** : 12.20. மணி.

**குறுக்கு விசாரணை :**

1) என்னுடைய மகனுக்கு சம்பளம் தராததால் அந்த பணத்திற்காக வேண்டி எதிரி காசோலை வழங்கினார். அந்த காசோலை போதிய பணமின்றி திருப்பப்பட்டதால் வழக்கிடபட்டது. நான் எனது மகனின் அதிகார முகவராக இருந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது மகன் எதிரியிடம் வேலை பார்த்ததற்கு அத்தாட்சி உள்ளது. இதுவரையில் எதிரி எனதுமகனுக்கு வழங்கிய சம்பளம் குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2) எனது மகனுக்கு எவ்வாறு சம்பளம் வழங்கபட்டது என்று அவரிடம் கேட்டுதான் சொல்ல வேண்டும். எனதுமகனின் வேலை நேரம் குறிப்பிட்டது கிடையாது. நோயாளிகள் வருவதற்கு இணங்க அழைக்கபடுவார். குறிப்பிட்ட வேலை நேரம் இல்லாமல் குறிப்பிட்ட சம்பளம் தருவதாக கூறபடுவது பொய் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் நேரம் குறிப்பிடபடும் ஆனால் ரேடியாலஜி டாக்டர் என்பதால் வேலைக்கு தகுந்தார்போல் அழைக்கபடுவார்.

3) முதல் விசாரணையிலேயே எதிரியானவர் சம்பளத்திற்காக காசோலை வழங்க பட்டதாக குறிப்பிட்டுள்ளார். காசோலையில் தேதி குறிப்பிட்டு எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பு.த.சா.2 ல் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்த தினத்தில் மேற்படி கடிதத்தையும் கொடுத்தார். காசோலை கொடுத்தது உண்மை என்ற போதிலும் அதற்கான பணத்தினை ரொக்கமாக வழக்கம்போல் கொடுத்து விட்ட பிறகும் எதிரிக்கு காசோலை திருப்பப்படாமல் வழக்கிடபட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) எனது மகன் சரிவர வேலைக்கு வராததால் நோயாளிகள் திரும்ப சென்றார்கள் என்றாலும் அதனால் எதிரியின் நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. அதனால் எதிரி எனது மகனிடம் பேசி அவர் செய்த வேலைக்கான தொகையை மட்டும் திரும்ப செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. சம்பளம் பெற்றதாக சொன்னால் வருமான வரி தாக்கல் செய்ய வேண்டிவரும் என்பதால் மேற்படி தொகை ரொக்கமாக பெறபட்டது என்றாலும் அதனாலேயே அத்தாட்சி எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல.

5) எனது மகன் எப்பொழுது மேற்படி வேலையில் இருந்து நின்று விட்டார் என்றால் மேற்படி பரிசோதனை கூடம் இருந்த வரை வேலைக்கு சென்றார். சம்பளம் கொடுக்காமல் கடைசி வரையில் வேலை செய்தார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல.

( எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி 25-11-2024 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது )

மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

T MUGIZHAMBIGAI

Digitally signed by T MUGIZHAMBIGAI
Date: 2024.11.21 15:12:07 +0530

20-வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை-03.